**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 233/2023**
**Prosecution Witness - PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கோபால கிருஷ்ணன். |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.07.2025.
(A 1 to A9 present).
முதல் விசாரணை–

நான் கீழ்குளம் ஆவரவிளையில் வசித்து வருகிறேன். திராவிட முன்னேற்ற கழக கட்சியில் ஒன்றிய செயலாளராக இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 08.07.2022 தேதியன்று நான் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம் வார்டு 7 ல் இடைதேர்தல் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. நான் தேர்தல் பொறுப்பாளராக என்னை மாவட்ட செயலாளர் நியமித்தார். நான் தேர்தல் பணி முடிந்துவிட்டு தெற்கு புதுவிளையில் இருந்து திங்கள் நகர்நோக்கி வந்துகொண்டிருந்தபோது என்னுடன் என்னுடைய கட்சிகாரர்கள் தங்கதுரை, ஜெனோ ரெனிடஸ், இன்னோவா ஓட்டுநனர் விஜின், வண்டி எண். TN 45 BB 0003 , என்னை மணிகண்டன்என்னை மறித்து கெட்ட வார்த்தையால் பேசி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி, அவர்களுடன் ஐயப்பன், கோபு, ஆயபாடி ரமேஷ் ஆகியோர் என்னை துரத்தினார்கள். நாங்கள் காரை நிப்பாட்டாமல் வந்தோம். தெற்கு புதுவிளையில் உள்ள கருங்காலி அம்மன் கோயில் அருகில் இரவு 8.45 மணிக்கு காரை நிறுத்தினோம். பின்னர் என் கார்மீது கல் தூக்கி போட்டார்கள் போட்டது யார் என்று எனக்கு தெரியவில்லை. நான் காரை விட்டு இறங்கியபோது மணிகண்டன் என்னை வெட்டு கத்தியால்

என்னை வெட்ட வந்தார். நான் தலையை சாய்த்ததால் வெட்டு என்மேல் படவில்லை. பினால் இருந்த ஐயப்பன், ஆயபாடி ரமேஷ், கோபு ஆகியோர் கம்பியால் என்னை கழுத்திலும் முதுகிலும் அடித்தார்கள். நான் தடுமாறி கீழே விழுந்ததும் அவர்களுடன் இருந்த சுமார் 5-6 பேர் என்னை முதுகில் மிதித்தார்கள். அப்போது நான் மயக்கம் அடைந்துவிட்டேன். என்னை என் உடன் இருந்த தங்கதுரை, ஜெனோ ரெனிடஸ், ஓட்டுநர் விஜின் ஆகியோர் என்னை காரில் ஏற்றி நெய்யூர் சிஸ் ஐ மருத்துவமணையில் சிகிட்சைக்கு சேர்த்தார்கள். அப்போது எனக்கு ஓர்மை இல்லை. என் கழுத்தில் கிடந்த 5 பவுன் செயின், 2 பவுன் பிரேஸ் லெட், பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.2000/- ஆகியவை காணாமல் போனதை இரவு 9.30 சுமார் மணிக்கு தெரிந்துகொண்டேன். பின்னர் போலீசார் மருததுவமணையில் என்னை வந்த விசாரித்தார்கள். அன்றைக்கு ஓர்மை சரியில்லாத நிலையில் கோயில் பெயரை மாற்றி சொல்லிவிட்டேன். சம்பவம் பற்றி போலீசாரிடம் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படுவது சம்பவ சமயத்தில் என்னை தாக்குவதற்கு பயன்படுத்திய வெட்டு கத்தி சா.பொ.1, இரும்பு கம்பி 3 எண்ணம். சா.பொ. 2ன் வரிசை, என்னுடைய இன்னோவா காரில் இருந்து உடைந்த கண்ணாடி துண்டுகள் சா.பொ.3 ஆகும். புகைப்படங்கள் எண்ணம் -2ல் உள்ளது சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம் அது சா.பொ-4ன் வரிசை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடன் வந்த தங்கதுரை திராவிட முன்னேற் கழக கிள்ளியூர் ஒன்றிய பொருளாளர். ஜெனோ ரெனிடஸ் திராவிட முன்னேற கழக பொறுப்பாளர். அந்த கால கட்டதில் திமுக வின் மாவட்ட செயலாளர் மகேஷ். மேற்கு மாவட்ட செயலாளர் மனோ தங்கராஜ் அவர் அந்த காலகட்டத்தில் தமிழக

அமைச்சரவையில் இருந்தார். அவர் தான் கன்னியாகுமரி மாவட்ட இடைதேர்தல்களுக்கு பொறுப்பாளர். புகாரை நான் சொல்ல சொல்ல, என்னுடன் இருந்தவர் எழுதினார். சம்பவம் நடந்த 8.07.2022 அன்றே புகார் கொடுத்துவிட்டேன். போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் அதில் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ–1ல் உள்ள கையொப்பம் அதுதான். 09.07.2022 அன்றும் நான் போலீசிடம் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் அதுவா என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. பின்னிட்டு சாட்சி போலீசார் என்னை மீண்டும் விசாரித்தார்கள் என்று கூறுகிறார். நான் தேர்தல் குழுவில் இருக்கும் நிலையில், 7 வது வார்டில் எத்தனை ஊர்கள் இருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த தேர்தலில் மொத்தம் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த இடைதேர்தல் நடந்த தேதி 09.07.2022 என்றால், அது விபரம் எனக்கு நினைவில் இல்லை. தேர்தல் விதிமுறை அமலுக்கு வந்த பின்னர் தேர்தல் முடிவு வரும் வரை அங்கு பறக்கும் படை, காவல் துறை, வருவாய் துறை ஊழியர்கள் ஆகியோர் இருக்கும் என்றால், சரிதான். சம்பவம் 07.08.2022 அன்று நடந்தது. தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் சென்றேன் என்றால், அது எனக்கு சரியாக நியாபகம் இல்லை. நான் புகார் கொடுக்கும் சமயத்தில் மணிகண்டன், ஆயபாடி ரமேஷ் ஆகியோரின் தகப்பனாரின் பெயர்களை சேர்த்து தான் சொன்னேன். என்னுடைய கட்சிகாரர்கள் அந்த விபரங்களை கூறினார்கள். அந்த சம்பவத்திற்கு முன்பு அந்த விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரிதான். கோபு, ஐயப்பன் , ரமேஷ் எந்த ஊரை சார்ந்தவர்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் அ.சா.ஆ.1ல் சக்கரன் மகன் மணிகண்டன் என்று உள்ளது. ஆனால் சங்கரன் மகன் மணிகண்டன் என்று இருக்கும். புகாரின் படி, என்னை தாக்கியது சங்கரன் அல்லது சக்கரன் மகன் மணிகண்டன் என்றால், அதுவிபரங்கள் எனக்கு தெரியாது. 7 வது வார்டில்

எத்தனை மணிகண்டன் உண்டு என்ற விபரம் எனக்கு தெரியாது. தற்போது என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் படி 1வது எதிரி மணிகண்டனின் தந்தை பெயர் பத்மநாப பிள்ளை என்றால் , இருக்கலாம். அதுவிபரம் எனக்கு தெரியாது. நான் தெற்கு புதுவிளையில் இருந்து திங்கள் நகர் வந்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன். தெற்கு புதுவிளையின் தெற்கில் என்ன ஊர் இருக்கிறது என்றால், அதுவிபரங்கள் எனக்கு தெரியவேண்டிய அவசியம் இல்லை. போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள் , ஆனால் அவர்கள் யார் என்ற விபரம் எனக்கு குறிப்பிட்டு தெரியவில்லை. நான் போலீசார் விசாரணையில் அடையாளம் மற்றும் பெயர் தெரியாத நபர் என் வண்டியை தனது மோட்டார் பைக்கை நிறுத்தி, என் வண்டியை நிறுத்தியதாக தான் சொன்னேன். போலீசார் விசாரணையில் என்னுடைய முதுகு, கழுத்து, தோள்பட்டையில் யார் அடித்தாகள் என்ற விபரத்தை கூறவில்லை என்றால், கம்பியாலும், கத்தியாலும் அடித்தார்கள். குறிப்பாக யார் அடித்தார்கள் என்று என்னால் சொல்லமுடியாது, 4 பேர் அடித்தார்கள். போலீஸ் விசாரணையிலும் அப்படி தான் சொல்லியிருப்பேன். நான் கையெழுத்து செய்த புகாரிரும் யார் எந்த இடத்தில் தாக்கினார்கள் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். போலீசார் விசாரணையிலும் காலால் மிதித்தது 5 பேர் என்று கூறியிருக்கிறேன். நான் குறிப்பிடும் கோயில் ரோட்டின் எந்த திசையில் இருந்தது என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. நான் வந்த வாகனத்தை போலீசாரிடம் சம்பவத்திற்கு பிறகு நான் காண்பித்தேன். எனது வாகனத்தின் முன்பக்கம் ஒரு நபர் ஒரு கல்லை தூக்கி போட்டார். ஆர்டிஓ அலுலவகத்திற்கு நான் எனது வண்டியை எடுத்து செல்லவில்லை. மணிகண்டன் என்னை வெட்டிய பிறகு மீண்டும் என்னை தாக்கினாரா என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. சம்பவத்திற்கு பிறகு அன்றை தினமே மருத்துவமனையில் எனக்கு நினைவு திரும்பியது. சம்பவம் நடந்தது இரவு இருட்டு நேரம் என்றால், சரிதான். அந்த சாலையின் இரு பகுதிகளிலும் மரங்கள் உண்டு என்றால்

இருக்கலாம். சம்பவ தினதன்று எனது சட்டையில் இரத்த கறை, மற்றும் மிதித்ததால் அழுக்கு ஏற்பட்டது. அந்த துணிகளை போலீசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. ஆஜர் 9 வது எதிரியின் பெயர் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் ஆயர்பாடி ரமேஷ் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கிருஷ்ணமணி என்ற எதிரியை எனக்கு அடையாளம் காட்ட தெரியாது. சம்பவத்திற்கு பிறகு 9 எதிரிகளின் பெயர்களை எனக்கு போலீசார் தெரிவிக்கவில்லை. எனது புகாரிலோ, போலீஸ் விசாரணையிலோ ஆஜர் எதிரிகளின் பெயர்கள் எவ்வாறு எனக்கு தெரியவந்தது என்ற விபரங்களை நான் குறிப்பிட்டு செல்லவில்லை என்றால், சரிதான். ஆஜர் எதிரிகளின் பெயர்களை சம்பவ தினத்தன்று எனது கட்சிகாரர்கள் தான் போலீசில் சொல்லியிருப்பார்கள், அதன் அடிப்படையில் புகார் எழுதப்பட்டிருக்கும். சம்பவ தினத்தன்று நான் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட புகார் நீதிமன்றத்திற்கு அனுப்பட வில்லை என்றால், சாட்சி தற்போது நான் தேதியை மாற்றி சொல்லியிருக்கலாம் என்கிறார். சம்பவ தினத்தன்றும், அதற்கு அடுத்த நாள் கொடுத்த புகாரும் நீதிமன்றத்திற்கு அனுப்பபடவில்லை என்றால், சரியல்ல. நான் சொல்லகூடிய நாள் மற்றும் நேரத்தில் சம்பவ இடத்திற்கு நான் செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல, நான் அங்கு போனேன்.சா.பொ-4 உடைந்த கண்ணாடி துண்டுகள் என்னுடைய காரில் உள்ளவை என்பதற்கான தனிப்பட்ட அடையாளங்கள் அதில் இல்லை என்றால், சரிதான். வெட்டுகத்திக்கும் அறுவாளுக்கும் வித்தியாசம் உண்டு என்றால், அதை வெட்டுக்கத்தி என்றும் அறுவாள் என்றும் சொல்வார்கள். பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வெட்டுகத்திக்கு கைப்பிடியோடு கொக்கி இருக்கும் என்றால், கொக்கி இல்லாத வெட்டுகத்தியும் உண்டு. எனது புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் நான் வெட்டுகத்தி என்று தான் சொல்லியிருக்கிறேன். என்னை தாக்க பயன்படுத்திய இரும்பு கம்பிகள் அனைத்தும் ஒரே அளவுள்ளவை அல்ல. சா.பொ. 2 ன் வரிசையில் ல் எந்த கம்பி

வைத்து யார் என்னை தாக்கினார் என்று என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. கண்ணாடி துண்டு, வெட்டுக்கத்தி, இரும்பு கம்பிகள் அனைத்தும் மல்லங்கருங்காளி கோயில் அருகில் கிடந்தன என்றால், சரிதான். எனது காரின் முன் பக்க கண்ணாடியில் பேப்பர் எதுவும் ஒட்டப்படவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் சா.பொ.3 உடைந்த கண்ணாடி துண்டில் பேப்பர் ஒட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். சான்று பொருட்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றாலும், அவற்றை நான் தான் வழக்கிற்காக காவல் நிலையத்தில் கொண்டு கொடுத்தேன் என்றால், சரியல்ல. கார் கண்ணாடியை உடைக்க பயன்படுத்திய கல் சம்பவ இடத்தில் கிடந்தது என்றால், சரிதான். 09.07.2022 ல் அன்று குருந்தன்கோடு 7 வது வார்டு இடை தேர்தல் இருந்ததால் அதற்கு முந்தைய தினம் வெளியூரை சார்ந்த கட்சிகாரர்கள் , வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கவோ, பொருள் கொடுக்கவோ போககூடாது என்ற விதிமுறையை மீறி அங்கு சென்ற நாங்கள், எனது வண்டியை நாங்களாகவே உடைத்து, எதிரிகளுக்கு எதிராக தவறுதலாக புகாரை கொடுத்து போலீசாரின் கவனத்தை திசைதிருப்பினோம் என்றால், சரியல்ல. அந்த வார்டிற்கு உட்பட்ட நபர்களை கைது செய்துவிட்டால் அந்த நபர்களின் குடும்பத்தினர் எங்கள் கட்சிக்கு எதிராக ஓட்டுப்போடுவதை எங்கள் கட்சிகாரர்கள் இவ்வாறு தடுக்க முயன்றார்கள் என்றால், சரியல்ல. நான் ஆளும் கட்சியின் பொறுப்பில் இருந்ததாலும், எனது செல்வாக்கை பயன்படுத்தி ஆஜர் எதிரிகளுக்கு எதிராக தவறுதலாக புகார் கொடுத்து, இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**